

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம் பூண்டி ஊராட்சி நடுப்பட்டி கிராமத்தில் 7 வயது சிறுமி மாயமான வழக்கில் 11 நாட்கள் ஆகியும் சிறுமியை இதுவரை கண்டுபிடிக்காத தமிழக அரசையும், மெத்தனப் போக்கில் உள்ள போலீசாரை கண்டித்து ஆலம் பூண்டியில்விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தரணிவேந்தன் கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்தினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ்ச் செல்வன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

செஞ்சி அருகே மாயமான 7 வயது சிறுமியை 11 நாட்களாகக் கண்டுபிடிக்க முடியாத நிர்வாகத் திறனற்ற 'டம்மி' முதல்வர் ஆட்சியைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் முன்னிலை! ஆரணி எம்.எஸ்.தரணி வேந்தன் எம்.பி. தலைமையில் பல்லாயிரவர் பங்கேற்பு!

செஞ்சி, அக் 23 -

செஞ்சி அருகே 7 வயது சிறுமி மாயமான வழக்கில் இன்று 11 நாட்கள்ஆகியும் வழக்கில் எந்தவித முன்னேற்றமும் இல்லாத நிலையில் சிறுமியை இதுவரை கண்டுபிடிக்காத தமிழ்நாடு அரசையும் காவல்துறையின் மெத்தனப் போக்கையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டியில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தரணிவேந்தன் தலைமை தாங்கி உரை நிகழ்தினார்.



இதில் 7 வயது சிறுமி மாயமான வழக்கில்இன்று 11 நாட்கள் ஆகியும் இந்த வழக்கில் எந்தவித முன்னேற்றமும் இல்லாத நிலையில் சிறுமியை இதுவரை கண்டுபிடிக்காத த.வெ.க. அரசையும், காவல்துறையின் மெத்தனப் போக்கையும் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிறுமி மாயமாகி 11 நாட்கள் கடந்தும் இதுவரை எந்த ஒரு முகாந்திரமும் கிடைக்காமல் போலீசார் திணறி வரும்நிலையில் சிறுமி. மாயமான வழக்கில் தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் அறிவித்ததுடன் சி.பி.சி.ஐ.டி. போலீஸ் விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஒன்றிய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் பங்கேற்பு!

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலா மணி செந்தமிழ்ச் செல்வன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட துணை செயலாளர் அமுதா ரவிக்குமார், பொதுக் குழு உறுப்பினர் மணிவண்ணன், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், மணிமாறன்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொத்தியார் அலி மஸ்தான், மொடையூர் துரை , இளம்வழுதி முன்னாள் துணைச் சேர்மன் ஜெயபாலன்,முன்னாள் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,உள்ளிட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், தி.மு.க. நிர்வாகிகள், பொதுமக்கள் என ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

செஞ்சி மஸ்தான் பேச்சு!

கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்முன்னிலை வகித்து பேசுகையில்:

முன்னாள் நடிகர் இன்னாள் முதல்வர் விஜய் அரசினால் குழந்தையை கண்டுபிடிக்க முடியவில்லை காவல் துறையின் நடவடிக்கை மெத்தனமாக உள்ளது.

த.வெ.க. ஆட்சியில் கொலை கொள்ளை, பாலியல் பலாத்காரம், கடத்தல் போன்றவை நடைபெறுகின்றன.

த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகு 117 குற்றங்கள் நடைபெற்றுள்ளன. இதில் குற்றங்களில் தொடர்புடையவர்கள் த.வெ.க. கட்சி நிர்வாகிகள் இருப்பதாக குற்றம் சாட்டினார்.

ஆரணி எம்.எஸ்.தரணிவேந்தன் பேச்சு!

தொடர்ந்து ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தரணிவேந்தன் தலைமை வகித்து பேசுகையில்:

குழந்தையின் நிலை குறித்து என்ன வென்று தெரிந்து கொள்ள மாவட்ட கண்காணிப்பாளரை தொடர்பு கொள்ள முடியவில்லை என குற்றஞ் சாட்டினார்.

அப்பா எங்கே என்று கேட்ட முதல்வர் விஜய் எங்களுக்கு காணாமல் போன குழந்தைதான் வேண்டும் உங்கள் குடும்பத்தின் மீதே அக்கறை இல்லாத விஜய்க்கு எப்படி காணாமல் போன குழந்தைக்கு அக்கறை வரும்.

தமிழகத்தில் கற்பழிப்பு,கடத்தல் சம்பவங்களில் தவறு செய்தவர்களை சுட்டு இருந்தால் த.வெ.க.வினர் தான் அதிகம் சுட்டு இருக்க வேண்டும் அவர்கள் தான் தவறு செய்கிறார்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் பெண் மணியை த.வெ.க. அரசு கைது செய்கிறது

இந்த கைதிற்கு கண்டனம் முதலில் தெரிவித்தது கழகத் தலைவர் தான் தமிழகத்தில் எங்கும் பார்த்தாலும் கொலை கொள்ளை, கடத்தலுக்கு காரணமாக த.வெ.க. கட்சியினர் உள்ளனர். ஆட்சிக்கு வந்து 5 மாதங்களில் வாக்கு சதவிகிதம் த.வெ.க. கட்சிக்கு குறைந்துள்ளது.

த.வெ.க.விற்கு வாக்களிக்க கூறிய குழந்தைகள் இன்று காணாமல் போகிறார்கள், பாலியல் சீண்டலுக்கு உள்ளாகுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

சாலை மறியல்!

இதைத் தொடர்ந்து மாயமான சிறுமியை விரைந்து கண்டுபிடிக்க வேண்டும் எனதமிழக அரசையும் போலீசாரை வலியுறுத்திவிழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்,ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணி வேந்தன் ஆகிய முன்னிலையில் தி.மு.க. வினர் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர் இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தி.மு.க. போராட்டம் நடத்திய நிலையில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் நேரில் விசாரணை!

செஞ்சி அருகே 7 வயது சிறுமிமாயமான வழக்கில் திமுக நேற்று கண்டன போராட்டம் நடத்திய நிலையில் சிபிசிஐடி போலீசார் நேரில் விசாரணைமேற்கொண்டுள்ளனர்.

செஞ்சி அருகே 7 வயது சிறுமி மாயமான வழக்கில் நேற்று11 நாட்கள்ஆகியும் வழக்கில் எந்தவித முன்னேற்றமும் இல்லாத நிலையில் சிறுமியை இதுவரை கண்டுபிடிக்காத தமிழ்நாடு அரசையும் காவல்துறையின் மெத்தனப் போக்கையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டியில் நேற்று நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தரணிவேந்தன் தலைமை தாங்கி கண்டன உரை நிகழ்தினார்.

இதில் 7 வயது சிறுமி மாயமான வழக்கில் 11 நாட்கள் ஆகியும் எந்தவித முன்னேற்றமும் இல்லாத நிலையில் சிறுமியை இதுவரை கண்டுபிடிக்காத தமிழ்நாடு அரசையும்,காவல்துறையின் மெத்தனப் போக்கையும் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்நிலையில் தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவித்ததை அடுத்து தமிழக அரசு சிறுமி காணாமல் போன வழக்கை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றி உத்தரவிட்டது இதையடுத்து சி.பி.சி.ஐ.டி.டி.எஸ்.பி. கீதா தலைமையிலான போலீசார் சிறுமி காணாமல் போன அவரது வீட்டில் நேற்று நேரில் விசாரணை மேற்கொண்டார். சிறுமியின் பெற்றோர் உள்ளிட்டவர்களிடம்சிறுமி காணாமல் போனது குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டார்.மேலும் சி.பி.சி.ஐ.டி. டி.எஸ்.பி. கீதா ஆய்வாளர் ரேவதி உள்ளிட்ட போலீசார் சிறுமியின் வீட்டின் அருகில்உள்ள பல்வேறு இடங்களை ஆய்வு மேற்கொண்டனர். தொடர்ந்து சிறுமியின் வீட்டின் அருகில் உள்ள வீட்டின் உரிமையாளர்களிடமும் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்டின் நிதியை

122ஆம் ஆண்டில் ரூ.25 ஆயிரம் கோடியாக உயர்த்த இலக்கு!

சு.கல்யாணசுந்தரம் எம்.பி பேட்டி! செ.இராமலிங்கம் - சாக்கோட்டை க.அன்பழகன் பங்கேற்பு!

தஞ்சாவூர், அக். 23 – தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் கழக நிர்வாகிகளால் நிர்வாகிக்கப்பட்டு வரும் கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் நிறுவனத்தின் 122 ஆம் ஆண்டிற்காக பேரவை கூட்டம் நிறைவு பெற்றதையடுத்து நிதியின் வளர்ச்சி குறித்து நிதியின் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினரமான சு.கல்யாணசுந்தரம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அவர் கூறியதாவது : 1903ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நிதிநிறு வனம் தமிழகமெங்கும் 156 கிளைகளுடன் 123 ஆண்டுகளாக சிறப்பாக மக்களுக்கு சேவை செய்து வருகிறது. இந்த நிதியின் 122ம் ஆண்டு பேரவைக் கூட்டம் கடந்த 30.09.2026 அன்று காணொளி மற்றும் பிற ஒலிஒளி வழிமுறைகள் மூலமாகவும் நடை பெற்று முடிந்தது.

2021ஆம் நிதியாண்டு முடிவில் ரூ.2737.74 (ரூபாய் இரண்டாயிரத்து எழுநூற்று முப்பத்து ஏழு கோடியே எழுபத்து நான்கு இலட்சம்) கோடியாக இருந்த வைப்புகளையும், ரூ.2608.91 (ரூபாய் இரண்டாயிரத்து அறுநூற்று எட்டு கோடியே தொண்ணூற்று ஒரு இலட்சம்) கோடியாக இருந்த கடன்களையும், தற்போதைய நிர்வாகம் பொறுப்பேற்ற பிறகு கடந்த 5 ஆண்டுகளில் 2026ம் நிதியாண்டு முடிவில் வைப்புகள் ரூ.6087.54 (ரூபாய் ஆறாயிரத்து என்பத்து ஏழு கோடியே ஐம்பத்து நான்கு இலட்சம்) கோடியாகவும், கடன்கள் ரூ.5745.89 (ரூபாய் ஐந்தாயிரத்து எழுநூற்று நாற்பத்தைந்து கோடியே எண்பத்தொன்பது இலட்சம்) கோடியாகவும் உயர்த்தியுள்ளது. நிதியின் மொத்த வணிகத்தை சுமார் ரூ.13,575 (ரூபாய் பதிமூன்றாயிரத்து ஐநூற்று எழுபத்தைந்து கோடி) கோடிக்கு (16.10.2026 தேதியில்) உயர்த்தியும், இந்திய அளவில் எந்த நிறுவனமும் அடைந்திடாத வளர்ச்சியை எட்டி, 31.03.2026 தேதி முடிவில் ரூ.189.21 (ரூபாய் நூற்று எண்பத்தொன்பது கோடியே இருபத்தொரு இலட்சம்) கோடி நிறுவனம் லாபத்தை அடைந்து ஊழியர்களுடைய ஒத்துழைப்புடன் நிர்வாகம் திறம்பட செயலாற்றி பெருமை சேர்த்துள்ளது.

கடந்த காலங்களில் பங்குதாரர்களுக்கு 10%ஆக வழங்கப்பட்டு வந்த லாபத்திற்கேற்ற பங்காதாயத்தொகை படிப்படியாக உயர்ந்து வந்த நிலையில் 2021ம் ஆண்டு தற்போதைய நிர்வாகம் பொறுப்பேற்றபோது மேற்படி பங்காதாயத்தை 22% சதவீதத்திலிருந்து அதிகபட்சமான 25% சதவீதமாக உயர்த்தி தற்போதுவரை வழங்கிவருகிறது.

நிதியின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக இருக்கும் ஊழியர்களின் நலனை கருத்தில்கொண்டு தற்போதைய நிர்வாகம், நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் படி நிதியின் வரலாற்றிலேயே முதன்முறையாக சுமார் ரூ.9.72 (ரூபாய் ஒன்பது கோடியே எழுபத்து இரண்டு இலட்சம்) கோடிக்கு புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தம் நடப்பு நிதியாண்டில் செய்து, ஊழியர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் அதனை நடைமுறை படுத்தியுள்ளது.

சமுதாய பொறுப்புணர்வு திட்டத்தின் (CSR) கீழ் (20212026) கடந்த 5 ஆண்டுகளில் சுமார் ரூ.8.91 (ரூபாய் எட்டு கோடியே தொண்ணூற்றொரு இலட்சம்) கோடிகள் சமுதாய முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் பல்வேறு 87 பணிகளை நிதியின் நிர்வாகம் செய்துள்ளது.

2021ல் ரூ.294.30 (ரூபாய் இருநூற்று தொண்ணூற்று நான்கு கோடியே முப்பது இலட்சம்) கோடியாக இருந்த நிதியின் சொந்த இருப்புநிதி (Reserve Fund) 2026ல் ரூ.716 (ரூபாய் எழுநூற்று பதினாறு கோடி) கோடியாக தற்போதைய நிர்வாகம் உயர்த்தியுள்ளது. நிதியின் சட்டப்பூர்வ வைப்புநிதி மற்றும் இதர நிதிகளை வங்கியில் வைப்பீடு செய்யும் போது வெளிப்படைத்தன்மையுடன் அதிக வட்டி தரும் வங்கிகளிலேயே வைப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

தற்போது செயல்பட்டு வரும் 156 கிளைகளுடன் மேலும் 49 புதிய கிளைகள் துவங்க மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. விரைவில் 205 கிளைகளுடன் நிதியின் கிளைகள் விரிவடைந்து கிராமப்புறங்களிலும் சிறப்பாக சேவையாற்றவுள்ளது. தற்போதைய நிர்வாகக்குழு நிதியின் மொத்த வணிகத்தை ரூ.13,575 (ரூபாய் பதிமூன்றாயிரத்து ஐநூற்று எழுபத்தைந்து கோடி) கோடியிலிருந்து ரூ.25,000 (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) கோடியாக உயர்த்துவதற்கு இலக்கு நிர்ணயித்து அதற்கான முயற்சி யில் தற்போதைய நிர்வாகம் ஈடுப்பட்டு வருகிறது.

நடந்து முடிந்த 122ஆம் ஆண்டு நிதியின் பேரவை கூட்டத்தில் ஏற்கனவே பொறுப்பில் இருந்த இயக்குனரவை மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது என்ப தனை பங்குதாரர்கள் அனைவருக்கும் இயக்குனரவை தெரிவித்துக் கொள்கிறது. தொடர்ந்து பங்குதாரர்கள் தங்களது நல் ஆதரவை வழங்கும் படி இயக்குனரவை கேட்டுக்கொள்கிறது. பங்குதாரர்களாகிய தங்களின் உதவியுடன் நிதி மென்மேலும் வளர்ச்சியடையும் என்பதையும் இயக்குனரவை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறது. இவ்வாறு பேட்டியில் நிதி நிறுவனத்தின் தலைவர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தெரிவித்தார்.

பேட்டியின் போது நிதி நிறுவனத்தின் துணைத் தலைவரும், முன்னாள் எம்.பியுமான செ.இராமலிங்கம், மூத்த இயக்குனரும், தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளருமான சாக்கோட்டை க.அன்பழகன், மேலாண் இயக்குனர் பி.ஆர்.பி.வேலப்பன், இயக்குனர்கள் பி.பிரகாசம், ஜி.துரைராஜ், இ.அம்பிகா, எம்.குருபிரசாத், எஸ்.இரவிச்சந்திரன், பொது மேலாளர் கள் எஸ்.வெங்கடேசன், சண்முகம், துணை பொது மெலாளர் பி.கருணாநிதி, நிறுவனச் செயலாளர் கண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் இருந்தனர்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; பரந்தூர் விமான நிலையத் திட்டம் ரத்துன்னு சட்டசபையிலே முதலமைச்சர் அறிவிச்சாரில்லையா! அவங்க கட்சிக்காரங்க கூட பலமா கைதட்டினாங்க. டி.வி.யிலே பார்த்தோமே! ஆனா இது வரைக்கும் அது சம்பந்தமா அரசாணை எதுவும் வரலையாமே!

பட்டணம் : **ஆமாமய்யா; நானும் கேள்விப்பட்டேன், பேப்பர்லேயுமே படிச்சேன், அதிகாரிகளும் என்ன பண்றதுன்னு தெரியாமல் குழம்பிட்டுதான் இருக்காங்களாம். தி.மு.க. ஆட்சியிலே திட்டம் அறிவிச்சா உடனே ஜீ.ஒ.வந்துடும். ஹூம்! த.வெ.க. ஆட்சி பத்தி என்னத்த சொல்ல!**